**மத்திய கடுகதிப்பாதைச் செயற்திட்டம் (கட்டம் III) - 2017**

---

மத்திய கடுகதிப்பாதைச் செயற்திட்டத்தின் (கட்டம் III) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் செயற்திட்டம் நிறைவேற்றப்படுகின்றதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அமுலாக்கப்படுகின்றது. பிராந்தியங்களுக்கிடையே உயர்ந்தளவான நகர்வுத்தன்மையினை உறுதிப்படுத்தவதற்கு மத்திய கடுகதிப்பாதையினை நிர்மாணித்தல், வீதிப் பாதுகாப்பினை அதிகரித்தல் மற்றும் பிரயாண நேரம், போக்குவரத்து நெரிசல், வாகன தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான கிரயங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாசடைதல் என்பவற்றைக் குறைத்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. குருநாகல்லிலுள்ள பொத்துஹெரவிலிருந்து கண்டியிலுள்ள கலஹெதர வரையான 34.14 கிலோமீற்றர் வீதி இணைப்பொன்றுடன் 04 கட்டங்களின் கீழ் கடவத்தையிலிருந்து தம்புள்ளை வரை மத்திய கடுகதிப்பாதையின் நிர்மாண நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தன. பொத்துஹெரவிலிருந்து கலஹெதர வரையான மத்திய கடுகதிப்பாதைப் பிரிவின் நிர்மாணத்திற்காக அமுல்ப்படுத்தப்பட்ட மத்திய கடுகதிப்பாதைச் செயற்திட்டத்தின் (கட்டம் III) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்களினை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான

தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டு பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தலுக்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும், மற்றும்

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 92.3 மில்லியன் கூட்டுத்தொகையான காணி சுவீகரித்தல் தொடர்பான இழப்பீடு மீதான வட்டி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட மதியுரையாளர் நிறுவனமொன்றால் முரண் கட்டளையொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் சட்டரீதியான செல்லுபடியாகும் தன்மையை கருத்தில் கொள்ளாமல் அவ்வாறு கோரப்பட்ட ரூபா 161 மில்லியன் தொகையானது நடைபெறும் வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அது தொடர்பான இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்கள் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினர்களால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் ரூபா 152.60 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் 2014 ஆம் ஆண்டிலிருந்து உரிய மதியுரையாளரிற்கு செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது.

(இ) இதற்கு மேலதிகமாக உள்ளூர் மதியுரையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வுகள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 31.60 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டிற்கான வரிசை அமைச்சின் பாதீட்டு மதிப்பீட்டில் உள்நாட்டு நிதியளிப்பு மூலங்களினூடாக ரூபா 2,550 மில்லியன் தொகையான ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும், உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றிலிருந்து 2014 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனொன்றில் ரூபா 400 மில்லியன் தொகையான ஒதுக்கீடொன்று செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் அதே உரிமம் பெற்ற விசேட வங்கியிடமிருந்து பெறப்பட்ட வேறொரு கடனில் ரூபா 913.60 மில்லியன் தொகையை காணி சுவீகரிப்பு நோக்கங்களிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்திருந்தது. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளில் ரூபா 3,266 மில்லியன் தொகையொன்று மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

2007 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட தேசிய பிரதான வீதி திட்டத்தின் கீழ் வடக்கு கடுகதிப்பாதையின் நிர்மாணம் தொடர்பான முன்மொழிவை திருத்தி பொத்துஹெரவிலிருந்து கலஹெதர வரையான வீதி இணைப்புடன் கடவத்தை தொடக்கம்

தம்புள்ளை வரையான மத்திய கடுகதிப்பாதையை நிர்மாணிப்பதற்காக 2015 யூலை 16 இல் அமைச்சரவை அங்கீகாரத்துடன் மத்திய கடுகதிப்பாதையின் கீழான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வடக்கு கடுகதிப்பாதை மற்றும் மத்திய கடுகதிப்பாதையின் நிர்மாணத்திற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து அவுஸ்திரேலியா மதியுரை நிறுவனமொன்றினால் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய சாத்தியவள ஆய்வு மீதான இறுதி அறிக்கை கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 02 உள்ளூர் பல்கலைக்கழகங்களிற்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கும் சாத்தியவள தொகுப்பு ஒன்றை தயாரித்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் அது தொடர்பான முறையான உடன்படிக்கைகள் 2018 யூலை 31 வரையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 காணிகளை சுவீகரித்தல் தொடர்பான சிக்கல்கள்

வீதி நிர்மாண நோக்கங்களிற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் 63 ஹெக்டெயர்கள் பரப்பளவான 662 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் கண்காணிப்பு நோக்கங்களிற்காக செயற்திட்டத்தால் உரிய நேரத்தில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் 03 உள்ளூர் மதியுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு ரூபா 11.8 மில்லியன் கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

### 3.5 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

செயற்திட்டத்தால் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மாற்றப்பட்ட 47 உபகரண உருப்படிகளின் பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட 600 உபகரண உருப்படிகள் உண்மையான பயன்தரு ஆயட்காலத்தை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் உரிய சொத்துக்களின் நியாயமான பெறுமதிகள் காட்டப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் 29 சொத்து உருப்படிகளின் பற்றாக்குறைகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதனை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.